காப்பு ... வாரணத் தானை ... விநாயகர்

......... பாடல் .........

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைதுவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.

......... சொற்பிரிவு .........

வாரணத்தானை அயனை விண்ணோரை மலர்க்கரத்து

வாரணத்தானை மகத்து வென்றோன் மைந்தனை துவச

வாரணத்தானை துணைநயந்தானை வயலருணை

வாரணத்தானை திறை கொண்ட யானையை வாழ்த்துவனே.

......... பதவுரை .........

வாரணத்தானை ... ஐராவதம் என்ற யானைக்கு தலைவனாகிய இந்திரனையும்

அயனை ... பிரம்மனையும்,

விண்ணோரை ... ஏனைய தேவர்களையும்,

மலர்க் கரத்து வாரணத்தானை ... தாமரை போன்ற கையில் பாஞ்ச சன்யம் என்கிற சங்கை ஏந்தி இருக்கும் திருமாலையும்,

மகத்து ... தட்ச யாகத்தில்,

வென்றோன் ... வீரபத்திரன் சொருபத்தில் வந்து ஜெயித்த சிவபெருமானின்,

மைந்தனை ... குமாரனும்,

துவச வாரணத்தானை ... கோழிக்கொடியை உடைய குமாரக் கடவுளை

துணை நயந்தானை ... சகோதரனாக பெற்றிருப்பவனும்

வயல் அருணை ... வயல்கள் சூழ்ந்த அருணாசலத்தில்,

வாரணத்தானை ... யானைமுகத்தை உடைய கஜமுகாசுரனை

திறை கொண்ட ... வெற்றி கொண்ட,

யானையை ... யானை முகம் கொண்டவனும் ஆகிய கணபதியை,

வாழ்த்துவனே. ... வணங்குகிறேன்.

......... பொழிப்புரை .........

வீரபத்திரர் உருவத்தில் தட்சயாகத்தில் எல்லா தேவர்களையும் சிட்சித்த சிவபெருமானின் குமாரனும் கந்தக் கடவுளின் சகோதரனும் கஜமுகனை
வென்றவரும் ஆன விநாயகரை, எப்போதும் வணங்குகிறேன். (இந்த நூல் சிறப்பாக அமைவதற்காக).